1974 மார்ச் 14]

இணைப்பு I.

[367-ம் பக்கத்தில் 419-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

வைகைக் கால்வாய் சீரமைப்பின் கீழ் உள்ள பல்வேறு வேலைத் திட்டங்களுக்கான முன்னேற்றங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பார்த்திபனூர் ரெகுலேட்டர் வேலைகள் :

பார்த்திபனூர் ரெகுலேட்டர் வேலைகள் அநேகமாக எல்லாம் முற்றுப் பெற்று விட்டன. நிரந்தர மின் இணைப்பு வேலைகள், மதகுப் பலகைகளைத் தூக்குவதற்கான இயந்திரப் பொறிகளைப் (**Hoisting Equipment**) பொருத்துதல் ஆகிய வேலைகள் தற்போது நடந்து கொண்டு வருகின்றன.

பார்த்திபனூர் ரெகுலேட்டரின் கீழ் உள்ள கால்வாய்கள் :

இடது புறத்தில் 45 கி.மீ. நீளத்திற்கு வெட்ட உத்தேசித்துள்ள கால்வாயில் 29·00 கி.மீ. நீளம் வெட்டி முடிக்கப்பட்டுள்ளது. வலது புறத்தில் 45 கி.மீ. நீளத்திற்கு வெட்ட உத்தேசித்துள்ள கால்வாயில் 29·00 கி.மீ. நீளம் வெட்டி முடிக்கப்பட்டுள்ளது.

விரகனூர் ரெகுலேட்டர் :

ரெகுலேட்டரின் சில பகுதிகளுக்கு ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்பட இருக்கின்றன. மற்றப் பகுதிகளில் வேலைகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

விரகனூர் ரெகுலேட்டரின் கீழ் உள்ள கால்வாய்கள் :

இடது புறத்தில் 31 கி.மீ. நீளத்திற்கு வெட்ட உத்தேசித்துள்ள கால்வாயில் 5 கி.மீ. நீளத்திற்கு கால்வாய் வெட்டுவதற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இடது புறக் கால்வாயின் பாக்கி பாகத்திற்கும் வலது புறத்தில் 46 கி.மீ. நீளத்திற்கான கால்வாய் வெட்டுவதற்குமான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

இணைப்பு II.

[374-ம் பக்கத்தில் 423-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

கீழ்க்கண்ட வகைகளைச் சேர்ந்த தொழில்கள் தொடர்பான இறக்குமதி விண்ணப்பங்கள், ஒவ்வொரு தொழிலுக்கெதிராகவும் குறிப்பிடப்பட்டுள்ள இம்மாநில அரசின் "பொருப்பேற்கும் அதிகாரிகளால்' பரிவுரை செய்யப்படுகின்றன :—

(i) கைத்தறித் தொழில் .. மாநிலக் கைத்தறித் துறை இயக்குநர்.

(ii) மீனை டப்பிகளில் அடைத்தல். மீனை உறைய வைத்தல் மற்றும் ஏனைய மீனவத் தொழில்கள்.	மாநில மீன்வளத்துறை இயக்குநர்.
(iii) பற்பொடி தயாரிக்கும் தொழில் உட்பட ஒப்பனைப் பொருள் தயாரிப்புத் தொழில், மருந்து தயாரிக்கும் தொழில்.	மருந்துகள் கட்டுப்பாட்டு அதிகாரி, சுகாதாரப் பணிகள்–குடும்ப நலத் திட்டத்துறை இயக்குநர்.
(iv) தொழில் நுட்ப வளர்ச்சி தலைமை இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் வராத பட்டியலில் சேராத சில தொழில்கள், சிறு தொழில் பிரிவுகள், சில கூட்டுறவுச் சங்கங்கள், கட்டுமான முகவரமைப்புகள், வாகனங்கள் தங்குமிட வேலைகள், டயர்களைப் புதுப்பிக்கும் தொழில் பிரிவுகள்.	தொழில்-வணிகத்துறை இயக்குநர்.
(v) கூட்டுறவுச் சங்கங்கள் ..	கூட்டுறவுச் சங்கப் பதிவாளர்.
(vi) சில அச்சுத் தொழிற் பிரிவுகள்.	எழுதுபொருள்–அச்சுத்துறை இயக்குநர்.

2. ஒவ்வோர் ஆண்டும் இந்திய அரசால் வெளியிடப்படும் இறக்குமதி வணிகக் கட்டுப்பாடு கொள்கை நூலின் அடிப்படையிலும், இறக்குமதி வணிகக் கட்டுப்பாடு விதிகள், நடைமுறை கையேட்டின் அடிப்படையிலும் பரிவுரைகள் அமைந்துள்ளன.

Import applications relating to the following categories are recommended by the Sponsoring Authorities under this State Government noted against each below :

(i) Handloom Industry	The State Director of Handlooms.
(ii) Canning, Freezing and other Fishery Industries.	The State Director of Fisheries.

LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

(iii) Pharmaceutical Industry and Cosmetics including tooth powder industry.	The Drugs Controller and Director of Health Services and Family Planning.
(iv) Certain non-Director-General of Technical Development and non-Scheduled Industries, Small Scale Industrial units, certain Co-operative Societies, Construction Agencies, Garage Works, Retreading Units.	The Director of Industries and Commerce.
(v) Co-operative Societies.	Registrar of Co-operative Societies.
(vi) Certain Printing Units.	Director of Stationery and Printing.

2. The recommendations are based on the Import Trade Control Policy Book, Import Trade Control Handbook of Rules and Procedure published by the Government of India every year.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS